# தொழிநுட்ப சாதனங்கள் இளங்கலை மாணவர்களிடையே ஏற்படுத்தியுள்ள நடத்தை சார் மாற்றங்கள் : இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

M.N.P. Rifasha[1], H.F. Badhusha[2], M.A.F. Ashfa[3], M.S. Ismiya Begam[4], M.S. Zunoomy[5]

[1,2,3,4] *Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*
[5]*Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*
frifasha98@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையான நிலையில் இயங்கிக் கொண்டிருந்த மனிதனை இன்று நவீன தொழில்நுட்பமானது இயங்குநிலை மனிதனாக மாற்றிவிட்டது. இந்த மாற்றமானது ஒவ்வொரு தனி மனிதனிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு தனி மனிதனிலும் ஒழுக்கம் சார், விழிப்புணர்வு சார், நடத்தை சார், கலாசாரம் சார், கல்வியியல் சார், உளவியல் சார் என மனிதனின் சகலவிதமான வாழ்வியல் அம்சங்களிலும் அபரிதமான மாற்றங்களை இவை நிகழ்த்தி வருகின்றன. அவற்றில் அநேகமானவை ஒழுக்கம் சார் விடயங்களில் பாதகமான மாற்றங்களையே நிகழ்த்தி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறாக மாற்றத்தினை உள்வாங்கியவர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் உள்வாங்கப்படுகின்றனர். அந்தவகையில் கொவிட்-19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களின் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பாவனையால் அவர்களின் ஒழுக்கம் சார் அம்சங்களில் ஏற்பட்டுள்ள பாதக மாற்றங்களை கண்டறிதல் என்பதை நோக்கமாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு பிரதேசமாக இலங்கை தென்கிழக்கு பல்கழைக்கழகத்தின் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களில் 152 பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வானது தரம்சார், பண்புசார் முறையியலின் ஊடாக விபரிப்பு முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் ஆகிய முதலாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளிற்காக ஆய்வுகள், நூற்கள், கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளாக, அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் அதிக தொழில்நுட்ப பாவனையால் பாதக மாற்றங்களை அடையப்பெற்றுள்ளனர் என்பது இனங்காணப்பட்டுள்ளது. கொவிட்-19 காலப்பகுதியில் மாணவர்களில் 91.4 வீதமானவர்கள் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தியுள்ளனர். இதனால் 7 மணித்தியாலங்களை விடவும் அதிகமான மணிநேரங்களுடன் செலவழிப்பதால் அதிகமான பாதக மாற்றங்களை பல்கலைக்கழக மாணவர்களிடம் கண்டறியப்பட்டுள்ளது. தேவையற்ற காணொளி, இரவு வேளைகளில் விழித்திருத்தல், நவீன வாழ்க்கைப் போக்கு, கெட்ட நண்பர்கள் என இன்னோரன்ன பாதக மாற்றங்களும் கண்டறியப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு நவீன தொழில்நுட்ப சாதனங்கள் முக்கிய காரணமாக காணப்படுவதோடு அவர்களின் ஒழுக்கம்

சார் அம்சங்களிலும் பாதக மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பவைகளும் கண்டறியப்பட்டன.

**திரவுச்சொற்கள்:** தொழிநுட்ப சாதனங்கள், இளங்கலை மாணவர்கள், நடத்தை மாற்றங்கள்

## ஆய்வு அறிமுகம்

தற்காலத்தில் சமூகங்களை அதன் கட்டமைப்பின் அடிப்படையில் “இலத்திரனியல் சமூகம் - E-Society” என அழைக்கப்படுமளவு இணையத்துடனும், நவீன தொழிநுட்பத்துடனும், சமூக ஊடகங்களுடனும் பின்னிணைந்ததாக உள்ளன. ஏனெனில், இன்றைய நவீன தொழில்நுட்ப சூழலில் மக்கள் வாழ்க்கை நடைமுறைகள் அனைத்தும் நவீன தொழிநுட்பங்களையும், நவீன தொழிநுட்ப சாதனங்களையும் அடிப்படையாக கொண்டதாகவே அமைந்துள்ளன. நவீன தொழிநுட்பம் அல்லது சமூக ஊடகம் என்பது வலைத்தளங்களின் வழியாக தகவல், கருத்துக்கள், தொழில்சார் நலன்கள், மற்றும் வெளிப்பாட்டின் பிற வடிவங்களை உருவாக்கவும், பகிர்வுக்கு உதவும் ஊடகங்கள் கணினி நடுநிலை தொழிநுட்பங்கள் ஆகும். தற்போது சமூக. இந்த நவீன தொழிநுட்பம் குறித்து இன்னொரு விளக்கம் கூறுவதாயின் சமூக ஊடகங்கள் அல்லது நவீன தொழிநுட்பம் என்பது மக்கள் இயங்கலை Online மூலம் ஒருவரோடு இடைவினை கொள்வதற்கு பயன்படுத்தும் ஊடகங்களாகும் (டயசியா, 2017).

குறிப்பாக இன்றைய நவீன சமூகமானது நவீனத்துவத்தின் காரணமாக நவீன தொழிநுட்பத்தை உள்வாங்கி இயங்கிக் கொண்டு வருவதனால் உள்ளங்கையில் உலகம் என்னும் நிலையினை அடைந்துள்ளது. கல்வி, கலை, சுகாதாரம், விளையாட்டு, மருத்துவம், பொழுதுபோக்கு அனைத்து துறைகளிலும் நவீன தொழிநுட்பம் தான் அதிக பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு அனைத்திலும் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. நவீன தொழிநுட்பத்தின் பாவனையானது பல்வேறு தளங்களின் வாயிலாக செயற்பட்டு வருகின்றது. பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், கூகுள், யூடியுப், டெலிகிராம், வைபர், டிக்டொக் ஆகியவை இவ்வாறான தளங்களாக செயற்பட்டு வருகின்றன. நவீன தொழிநுட்ப பாவனையானது சமூகத்தில் பொதுவாக சகல வயதினராலும் தற்காலத்தில் அதிகம் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நவீன தொழிநுட்பங்களின் பாவனையானது அதிகமான ஈர்ப்பினையும், மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றமை மிக முக்கியமான விடயமாகும். ஆரம்ப காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், இந்தியா, சீனா போன்ற நாடுகளை மாத்திரம் ஈர்த்த நவீன தொழிநுட்பமானது இன்று உலகு முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இயக்கிச் செல்கின்றது. குறிப்பாக இன்றைய நிலையில் கொவிட் 19 காலத்தில் நிகழ்நிலைக்கல்விக்கு பழக்கப்படுத்தப்பட்ட மாணவர்கள் மத்தியில் இது புதுவிதமான செல்வாக்கினை செலுத்தி வருகிறது.

ஆரம்பத்தில் கல்வி என்னும் நிலையில் உள்நுழைந்த மாணவர்கள் படிப்படியாக அதில் இருந்து விலகி நவீன தொழிநுட்ப பாவனையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். அதில் ஒரு கட்டுப்பாடற்ற நிலையை அடைந்துள்ளனர் என்பது தான் உண்மை. நவீன தொழிநுட்ப பாவனையால் பல்கலைக்கழக மாணவர்களிடையே தற்போது ஒழுக்கம் சார், விழிப்புணர்வு சார், நடத்தை சார், கலாசாரம் சார், கல்வியியல் சார், சமூகம் சார், உளவியல் சார் என பலவாறான அம்சங்களில் மாற்றங்களை ஏற்பட்டுள்ளன. இதில் ஒழுக்கம் சார் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே அதிகளவில் மாணவர்களிடையே செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன. எந்த ஒரு விடயமாயினும் அதில் சாதக மற்றும் பாதக விளைவுகள் உண்டு. அதே போன்று தான் அறிவியல் தொழிநுட்பமாக இருந்தாலும் அதில் சாதக மற்றும் பாதங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக தொழிநுட்ப பாவனையால் அதிகமாக பாதகமான மாற்றங்களே அதிகமாக காணப்படுகிறன (யும்னா, 2020).

இன்னும் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் ஓரங்கமாகவே இந்த நவீன தொழிநுட்ப பாவனை சமூகத்தில் அதிகரித்துள்ளது. இந்த நவீன தொழிநுட்பத்தினை சரியாக பயன்படுத்திக் கொள்ள தவறுவதனால் தான் பல்கலைக்கழக மாணவர்கள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இதனால் நடத்தை சார், ஒழுக்கம் சார், கலாச்சாரம் சார், பிறழ்வு சார், உளவியல் சார், சமூகவியல் சார், கற்றல் சார், விழிப்புணர்வு சார் என பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன (மீரா மற்றும் நாதிரா, 2016).

எனவே இதனை அடிப்படையாக கொண்டே COVID-19 காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் நவீன தொழிநுட்ப சாதனங்களின் பாவனையால் அவர்களின் ஒழுக்கம் சார் அம்சங்களில் ஏற்பட்டுள்ள பாதக மாற்றங்களை கண்டறிதலை நோக்கமாக கொண்டு எமது ஆய்வு அமைகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இன்று நவீனத்துவம் என்பதை உள்வாங்கிக் கொண்ட எமது சமூகங்கள் மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. மேற்கத்தைய நாடுகளால் பின்பற்றப்பட்ட பல விடயங்களும் இன்று ஆசிய, ஆபிரிக்கா உட்பட ஏனைய நாடுகளிலும் பின்பற்றப்படுவது உண்மை. ஆரம்பத்தில் ஒரு சிலரால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த முகப்புத்தகம், ஸ்கைப், டுவீட்டர், வைபர், யுடியூப், வாட்சப், ஐம்ஒ, டெலிகிராம் போன்ற பல சமூக ஊடகங்களை இளைஞர்கள் மட்டுமின்றி கொவிட்-19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களும் அதிகளவு பயன்படுத்துகின்றனர்.

சமூக வளைத்தளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படினும், கொவிட்-19 காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தாமையால் கற்றல் விடயங்களில் பொடுபோக்காக, அலட்சியமாக இருப்பதோடு பல்வேறுபட்ட ஒழுக்கம்சார் அம்சங்களில் பல்வேறுபட்ட பாதக மாற்றங்களை பல்கலைக்கழக மாணவர்களிடம் அவதானிக்க முடிந்தது. எனவே

இந்த அனுமானத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வுக்கான ஆய்வுப் பிரச்சினை அடையாளப்படுத்தப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

கொவிட்-19 காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின், நவீன தொழில் நுட்ப சாதனங்களின் பாவனையால் அவர்களின் ஒழுக்கம்சார் அம்சங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிதல்.

**ஆய்வு முக்கியத்துவம்**

இன்று மனித வாழ்வின் அனைத்து துறைகளோடும் பின்னிப்பிணைந்ததாக சமூக வளைத்தளங்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம், மருத்துவம், கல்வி, வணிகம் என சமூக வளைத்தளங்கள் சேவை வியாபித்துள்ளது. இதனால் சமூக வளைத்தளங்கள் தேவை இன்றியமையாததாக மாறியுள்ளது. எனினும் சமூக வளைத்தளங்களில் நன்மையும், தீமையும் என்ற இரண்டு பக்கங்கள் காணப்படுகின்றன. சமூக வளைத்தளங்கள் உருவாக்கப்பட நோக்கம் சிறந்ததாக இருப்பினும் காலவோட்டத்தில் அதன் நோக்கம் சிதைக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் பாலர்கள், சிறார்கள், இளைஞர்கள், பெரியார்கள் முதற்கொண்டு பல்கலைக்கழக மாணவர்களும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவச் சமூகம் இதிலிருந்து விழிப்புணர்வு பெறுவது மிக முக்கியமாகும். இதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் விதிவிலக்கல்ல. எனவே, சமூகவலைத்தளங்களை முறையாக ஒவ்வொருவரும் பயன்படுத்தும் போது விண்ணுலக வாழ்க்கையை முறையாக கொண்டு செல்ல முடியும். அதேபோல், இம்மாணவ பருவத்திற்கு சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்படாதவிடத்து அவர்களது எதிர்காலம் சுக்கு நூறாகிப் போய் விடும். கோவிட்-19 காலப்பகுதியில் கற்றல் நடவடிக்கைகளுக்காக சமூக வளைத்தளங்களை மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் காலப்பகுதியாக அடையாளப்படுத்தப்படுகிறது. விரிவுரைக் கற்றலுடன் ஒப்பிடுகையில் இணையவழிக் கற்றலானது மேலதிக செயற்பாடுகள் இன்றி இருந்த இடத்திலிருந்தே கற்பதால் பல சாதக, பாதக விளைவுகளை கொண்டதாக காணப்படுகிறது. அந்தவகையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் சமூகவலைத்தளங்களின் செல்வாக்கு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாக கருதப்படுகிறது. இந்த வகையில் இவ்வாய்வானது கோவிட்-19 காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் நவீன தொழில் நுட்ப சாதனங்களின் பாவனையால் அவர்களின் ஒழுக்கம்சார் அம்சங்களில் ஏற்பட்டுள்ள பாதக மாற்றங்களை கண்டறிதல் பற்றி ஆராய்வதாக அமைவதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்விற்கான பிரதேசமாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் உள்வாங்கப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட இருநூறு மாணவர்களில்

பூரணமாக பூர்த்தி செய்யப்பட்ட 152 வினாக்கொத்துக்களை அடிப்படையாக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது தரம்சார், பண்புசார் முறையினூடாக விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகிறது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்டன. இவ் ஆய்வில் வினாக்கொத்து இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட இருநூறு பேருக்கு வழங்கப்பட்டது. அவற்றில் 152 பேர்கள் பூரணப்படுத்தியிருந்தனர். இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுகள், நூற்கள், இணைய சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MX EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் 7th International Symposium 2017 இல் வெளியிடப்பட்ட பு.டயசியா என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட ”தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்வரைபுசமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும் - கல்லடி பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு” இல், மாணவர்களுக்கு எவ்வாறான உடல், உள, சமூகப் பாதிப்புகள் ஏற்படுகிறது மற்றும் மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் பாவனையின் வீதத்தை அறிதல் என்பன கண்டறியப்பட்டுள்ளதோடு பெற்றோர்கள், ஆசிரியர்கள் சமூக ஊடகங்கள் மீதான பார்வையை அறிதல் என்பனவும் கண்டறியப்பட்டுள்ளன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 7th International Symposium 2020 இல் வெளியிடப்பட்ட A.S.F. Yumna என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட “சமூக வளைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமிய பாதிப்பும்” என்ற ஆய்வில், மாணவர்கள் அதிகமாக சமூக வளைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான காரணத்தை கண்டறிதலுடன் மாணவர்களின் விழுமிய விருத்தியில் சமூக வலைத்தள பாவனை எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பனவும் கண்டறியப்பட்டன.

“பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும், அதன் தாக்கங்களும் - அல் முர்ஸிட் மகா வித்தியாலயத்தின் 8-13ஆம் தர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வில்” A.S.F. Shameera, A.K.F. Nadhira ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பாடசாலை மணவர்களின் கைத்தொலைபேசிகள் பயன்படுத்துவதற்கான காரணத்தை கண்டறிதல் மற்றும் கைத்தொலைபேசியால் ஏற்வரைபுபாதகமான தாக்கங்களை அடையாளம் கண்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் 8th International Symposium 2021 இல் H.M. Paslan, M.N.F. Aakila, M.S. Zunoomy, F.H.A. Shibly ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்ட சமூக வலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களில் ஏற்படுத்திய தாக்கங்கள்: கொவிட் 19க்கு பின்னரான பகுப்பாய்வில், பல்கலைக்கழக மாணவர்களிடையே சமூக வலைத்தள பாவனை ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் International Symposium 8th 2019இல் M.A. Sumaiya, A.H. Safiya, A.R.M Mahsoom ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்ட ”பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் Whatsapp பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வில், முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் whatsapp பாவனைக்கான காரணம், அண்மைக்கால போக்கு என்பன கண்டறியப்பட்டதோடு whatsapp பாவனையால் ஏற்வரைபுஎதிர்மறையான பாதிப்புக்களும் கண்டறியப்பட்டுள்ளது.

South Eastern University of Sri Lanka Arts Research Session-2016 ல் K.Kanesarajah என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட “நவீன தொழில் நுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கவியல் பாதிப்புக்கள் - ஓர் ஆய்வு” இல், நனோ தொழில் நுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கப் பாதிப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு நனோ தொழில் நுட்பத்தின் பயன்பாடுகளை அறியச் செய்தல், நனோ தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தல் இவ்வாய்வின் துணை நோக்கமாகவும் கண்டறியப்பட்டுள்ளது.


South Eastern University Of Sri Lanka Arts Research Symposium-2019 ,ல் Thankavadivel Brownsen என்பவரால் ஆய்வுசெய்யப்பட்ட “ நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடும் இளைஞர்களில் ஏற்படுத்தும் உளவியல் மற்றும் ஒழுக்கவியல் பாதிப்புக்களும்” என்ற ஆய்வில், இளைஞர்கள் நவீன தொடர்பாடல் தொழில் நுட்பங்களையும் அதன் வசதிகளையும் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற ஒழுக்கவியல் மற்றும் உளவியல் பாதிப்புக்களையும் ஆய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, எமது ஆய்வானது இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தை மையமாக கொண்டு தொழில்நுட்ப சாதனங்கள் இலங்கை பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்படுத்தியுள்ள ஒழுக்கயீன நடத்தை சார் மாற்றங்களை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

**தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**


இவ்வினாக்கொத்தினை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 60.5% (92 பேர்) பெண்களும், 39.5% (60 பேர்) ஆண்களும் பூரணப்படுத்தியுள்ளனர். மேலும்,

அனைத்து பீடங்களில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீட மாணவர்கள் 97.7% ஆனவர்களும் கலை மற்றும் கலாசார பீடத்தைச் சேர்ந்த 3.9% ஆனவர்களும், FMC பீடத்தை சேர்ந்த 1.3% ஆனவர்களும் பூரணப்படுத்தியிருந்தனர். இதனை கீழ்வரும் வரைபு1 காட்டுகின்றது.




வரைபு 1 - பீடங்கள்


அப்பீடங்களில் முதலாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர்கள் 3.9% ஆனவர்களும், இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த 43.4% ஆனவர்களும், 50.7% ஆனவர்கள் மூன்றாம் வருடத்தைச் சேர்ந்தவர்களாகவும், 2% ஆனவர்கள் நான்காம் வருடத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். இதனை பின்வரும் வரைபு 2 காட்டுகின்றது.




வரைபு 2 – கல்வி கற்கும் ஆண்டு


கொவிட் -19 காலப்பகுதியில் நேரடியான கற்றல் நடவடிக்கைகள் தடைப்பட்டு மாறாக நிகழ்நிலை மூலமான கற்றல் முறைகளே அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்காக பல்வேறு

தொழில்நுட்ப சாதனங்களும் மாணவர்களிடையே பயன்படுத்தப்பட்டு வந்தன. அந்தவகையில் அவர்களிடம் கொவிட்-19 காலத்தில் கற்றல் நடவடிக்கைகளுக்காக எவ்வகையான தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தினீர்கள் என வினவப்பட்டது. அதன்போது, கையடக்கத் தொலைபேசியினையே அதிகமாக பயன்படுத்துவதாக பதில்கள் அமைந்திருந்தன. அதாவது 91.4% ஆனவர்கள் குறிப்பிட்டிருந்ததுடன் அதற்கடுத்ததாக பெரும்பான்மையானவர்கள் மடிக்கணினியை பயன்படுத்துவதாகவும் 50% ஆனவர்கள் குறிப்பிட்டனர். மேலும், 45.4% ஆனவர்கள் டெப் இனை கற்றலுக்காக பயன்படுத்துவதாகவும், 18.47% ஆனவர்கள் தொலைகாட்சியினூடாக கற்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர். இதனை காட்டுவதாக கீழுள்ள வரைபு 3 உள்ளது.





வரைபு 3 – பயன்படுத்தும் தொழில்நுட்ப சாதனங்கள்

இன்றைய காலகட்டத்தில் நவீன தொழில்நுட்ப முறைகளானது அனைத்து துறைகளிலும் உட்புகுந்துள்ளது. அதற்கு கல்வி மட்டும் விதிவிலக்கல்ல. மேலும், பல விடயங்களை இலகுபடுத்தி தருவதாகவும் இந்த நவீன தொழில்நுட்பம் காணப்படுகின்றது. அந்தவகையில் தொழில்நுட்பத்துடனான கல்வி நடவடிக்கைகளானது கற்றல் நடவடிக்கைகளுக்கு உகந்ததாக அமைகிறதா என்ற வினாவிற்கு, அதிகபட்சமானோர் அதாவது 53.3% ஆனோர் ஓரளவு எனவும், ஆம் என 30.3% ஆனோரும், இல்லை என 16.4% ஆனோர்களும் குறிப்பிட்டனர். எனவே, ஓரளவு தொழில்நுட்பத்துடனான கல்வியானது கற்றலுக்கு உகந்ததாக அமைகிறது என பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனை விளக்குவதாக வரைபு 4 காணப்படுகிறது.




வரைபு 4 - தொழில்நுட்ப சாதனங்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு உகந்தது


தொழில்நுட்பமானது ஒருவரது அன்றாட வாழ்க்கையில் பல செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தி வருகின்றன. அதற்காக பல மணி நேரங்களை செலவும் செய்கின்றனர். எனவே, நாளொன்றுக்கு தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தும் கால அளவாக ஒரு மணித்தியாலம் தொடக்கம் மூன்று மணித்தியாலம் வரை பயன்படுத்துவதாக 9.9% ஆனவர்களும், மூன்று தொடக்கம் ஐந்து மணித்தியாலம் வரை பயன்படுத்துவதாக 25.8% ஆனவர்களும், ஐந்து தொடக்கம் ஏழு மணித்தியாலம் வரை பயன்படுத்துவதாக 30.8% ஆனவர்களும், 7 மணித்தியாலங்கள் விட அதிகமாக பயன்படுத்துவதாகவும் 31.1% ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர். இதனை பின்வரும் வரைபு 5 காட்டுகிறது.




வரைபு 5 - தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தும் கால அளவு


அதேபோல் தொழில்நுட்ப பாவனையானது ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களது கற்றலுக்கு தடையாக உள்ளதா என வினவப்பட்ட போது 45.4% ஆனவர்கள் இல்லை என பதில் அளித்திருந்தாலும் 18.4% ஆனவர்கள் ஆம் தொழில்நுட்ப பாவனையானது கற்றலுக்கு தடையாக உள்ளது எனவும், 38.2% ஆனவர்கள் ஓரளவு தடையாக உள்ளது எனவும்

குறிப்பிட்டிருந்தனர். எனவே இவ்வினாவின் மூலம் ஏதாவதொரு வகையில் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனையானது தடையாகவுள்ளது என கண்டறிய முடிந்தது. இதனை கீழ்வரும் வரைபு 6 காட்டுகிறது.





வரைபு 6 - நவீன தொழில்நுட்ப பாவனை கற்றலுக்கு தடையாக உள்ளது

நவீன தொழில்நுட்ப சாதனங்கள் எனும் போது அவற்றில் நன்மையான விடயங்கள் காணப்படும் அளவிற்கு தீமையான விடயங்களும் காணப்படுகின்றன. இருப்பினும் நன்மையை மற்றும் தீமையை உள்வாங்கிக்கொள்வது என்பது அதனை பயன்படுத்துபவர்களது கையிலேயே உள்ளது. எனவே ஆய்வுக்குட்படுத்தியவர்களிடம் நவீன தொழில்நுட்ப பாவனையின் மூலம் உங்களால் நல்ல விடயங்களை மாத்திரம் கற்க முடிகிறதா என வினவப்பட்ட போது வினாவிற்கு அதிகபட்சமானோர் 61.8% ஆனோர்கள் ஓரளவு என்றும், 22.4% ஆனோர்கள் இல்லை என்றும், 15.8% ஆனோர்கள் ஆம் என்றும் குறிப்பிட்டிருந்தனர். இதனை கீழ்வரும் வரைபு 7 காட்டுகிறது.




வரைபு 7 - நவீன தொழில்நுட்ப பாவனையால் நல்ல விடயங்களை கற்க முடிகிறது

மேற்குறிப்பிட்ட வினாவின் அடிப்படையில் அவர்களது ஒழுக்கம் சார் மாற்றங்களை கண்டறிய நவீன தொழில்நுட்ப பாவனையானது வினாக்கொத்து வழங்கப்பட்டவர்களிடம் உங்களது தீய செயலுக்கு இட்டுச் செல்கிறதா என கேட்கப்பட்ட போது பெரும்பாலானோர் அதாவது 50.7% ஆனவர்கள் ஓரளவு இட்டுச் செல்கிறது எனவும், அதற்கடுத்து ஓரளவு தொகையினர் 34.9% ஆனவர்கள் இல்லை எனவும், 13.8% ஆம் தீய செயலுக்கு இட்டுச் செல்கின்றது எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபு 8 காட்டுகிறது.




வரைபு 8 - நவீன தொழில்நுட்ப பாவனை தீய செயலுக்கு இட்டுச்செல்கிறது

வரைபு 8 இன் அடிப்படையில் ஒழுக்கம் சார் விடயங்களில் எவ்வாறான பாதக மாற்றங்களை ஏற்படுத்துகிறது என வினவப்பட்டபோது பலர் பல்வேறுபட்ட பாதக மாற்றங்களை குறிப்பிட்டிருந்தனர். மேலும் அவற்றினால் எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டது எனவும் கலந்துரையாடப்பட்டது. அவற்றில்,

1. **அதிகமாக சமூக ஊடகங்களின் பாவனையில் ஈடுபடுதல்.**

இன்றைய கொரோனா காலத்தில் தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தியே பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களது ஒழுக்கயீன பாதக மாற்றங்களுக்கு அதிகமாக சமூக ஊடகங்களின் பாவனையை குறிப்பிட்டிருந்தனர். மேலும், இது பற்றி அவர்களுடன் கலந்துரையாடிய போது கல்வியை விட தற்போது வட்ஸ்அப், முகப்புத்தகம், யூடியூப், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களில் ஆர்வம் காட்டி விடுகிறோம் எனவும் அதனூடாக தெரிந்தவர்களுடனோ அல்லது தெரியாதவர்களுடனோ பேசிப் பழகுவதையே மிகவும் விரும்புவதாகவும் குறிப்பிட்டனர். மேலும், இதுவரை சமூகத்திற்கு தேவையான தகவல்களையே பகிர்ந்து வந்தாலும் தற்போது பயனற்றவற்றை பகிர்வதாகவும் நேரம் காலமின்றி அதிக நேரம் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். அதேபோல் நண்பர்களுடன் அரட்டையுடன் அவர்களுடன் சேர்ந்து தமக்கு பிடிக்காதவர்களின் அல்லது ஏனைய விரோத குழுக்களுக்கு தகாத வார்த்தைகள் உபயோகித்து அவர்களுக்கு ஏசுதல் போன்ற நன்நடத்தையற்ற செயல்களில் ஈடுபடுவதாக குறிப்பிட்டனர்.

2. கெட்ட நண்பர்கள் மற்றும் வேறு நபர்களுடன் தகாத உறவு

கொரோனா காலத்திற்கு முன்பு நட்பு கொள்ளும் நபர்களுடன் மிகவும் கவனமாக இருந்தவர்கள் கொரோனா காலத்தில் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனையால் அவற்றில் சமூக ஊடகங்களில் தெரிந்த அல்லது தெரியாத நபர்களுடன் நட்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதால் அவர்களிடம் காணப்படும் சில கெட்ட பழக்கங்களையும் பழகுவதாக கலந்துரையாடலின் போது தெரிவித்தனர். அவற்றில் தீய வார்த்தைகள் அதிகம் பேசுவதாகவும், நண்பர்கள் மூலமே போதைப் பொருட்கள் பாவணை செய்வதாகவும் குறிப்பிட்டனர். மேலும் போதைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடங்கள் பற்றியும் நண்பர்கள் மூலமாகவே தெரிந்து கொள்வதாகவும் குறிப்பிட்டனர். அத்துடன், சில நண்பர்கள் தரும் பெண்பிள்ளைகளது தொலைபேசி இலக்கங்களை வைத்து அவர்களுடன் வழிதவறிய முறையில் கதைத்தல், அவர்களை ஏளனம் செய்தல் போன்ற விடயங்களையும் செய்வதாக கலந்துரையாடலின் போது குறிப்பிட்டனர்.

3. சட்ட விரோதமான பொருட்கள் பாவிப்பதற்கு பழக்கப்படல்.

ஆய்வுக்குட்படுத்திய பல்கலைக்கழக மாணவர்களில் இத்தொற்று காலத்தில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை அதிகரிப்பால் அதன் மூலமே அதிகமான சமூகத்திற்கு விரோதமான போதைப் பொருட்கள் பற்றி அறிந்து கொண்டதாக குறிப்பிட்டனர். திரைப்படங்கள் மூலம், விளம்பரங்கள் மூலம், காணொலிகள் மூலம் புகைப்பிடித்தல், மதுபானம் குடித்தல் பற்றி அறிந்து கொண்டு அவற்றை தானும் பழகிக்கொள்ள முயற்சித்ததாகவும் குறிப்பிட்டனர். ஒரு சிலர் மீண்டும் இதனை செய்யக் கூடாது எனவும் எண்ணியிருப்பதுடன் ஒரு சிலர் ஒரு வித ஸ்டைலுடன் புகைப்பிடித்தலுடன் புகைப்படங்களும் எடுப்பதாக குறிப்பிட்டனர். சமூக தொழில்நுட்ப சாதனங்களில் மேலும் மெருகூட்டி போதைப்பொருட்களை காட்சியளிப்பதால் அதனை நிச்சயமாக சுவைத்துப் பார்க்க வேண்டுமெனவும் கலந்துரையாடலின் போது தெரிவித்தனர்.

4. தேவையற்ற காணொலிகளை பார்வையிடுதல்.

பொதுவாக கொவிட் 19 காலப்பகுதியில் கற்கை நடவடிக்கைகள் யாவும் இணைய வழியாக நடைபெறுவதால் மாணவர்கள் அதிகமாக நவீன தொழிநுட்பம் சமூக வலைத்தளங்கள் என்பவற்றை பயன்படுத்த பழக்கப்பட்டுவிட்டனர். அதிகமாக இணையச் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் அதிகமாக பேஸ்புக், வட்ஸ்அப் ஸ்டேடஸ், இன்ஸ்டாக்ராம் வீடியோக்கள, யூடியூப் போன்ற இணையத் தொழில்நுட்பங்களில் அதிகமாக காணொளிகளை காட்சிப்படுத்துபவர்களாகவும், அதில் அதிகமாக நேரத்தினை செலவிட்டு பார்வையிடக் கூடியவர்களாகவும் மாறிவிட்டனர். திரைப்படங்கள் தேவையற்ற காட்சிகள் பார்க்கத்தகாத பதிவுகள் மற்றும் வீடியோக்களை பார்க்கக் கூடியவர்களாகவும் நவீன தொழிநுட்ப பாவனையால் மாணவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். இதனால், தான் மாத்திரமின்றி தன்னைச் சூழ இருப்பவர்களையும் தீமையின் பால் தூண்டக் கூடிய ஒருவகை செயற்பாடு இயங்கி வருகின்றமை புலனாகின்றது. இவ்வாறான விடயங்களில் ஆண் மாணவர்கள் மாத்திரமல்லாது பெண்களும்

குறிப்பிட்டதொரு அளவில் ஈடுபட்டிருப்பதாக நாம் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய மாணவர்கள் கூறுகின்றனர்.

**5. வார்த்தை மற்றும் நடத்தையில் மாற்றமான செயற்பாடுகளை வெளிப்படுத்தல்.**

கொவிட்-19 காலத்தில் அதிகமாக நவீன தொழிநுட்ப சமூக வலைத்தளங்களை உபயோகிக்க தலைப்பட்ட மாணவர்கள் ஒரு புதுவித வாழ்க்கைப் போக்கை கடைபிடிக்க ஆரம்பித்துவிட்டனர். அதிகமாக நவீன போக்கை நடைமுறை நடத்தைகளில் பின்பற்றி வருகின்றனர். அதிகமாக வார்த்தைப் பிரயோகங்களில் ஆங்கில சொற்பிரயோகங்கள கூடுதலாக பிரயோகித்தல். இன்னும் மக்களால் விரும்பத்தகாத சொற்பிரயோகங்களை கடைபிடித்தல் போன்ற நடைமுறைகளையும் பின்பற்ற தலைப்பட்டுள்ளதோடு நடத்தையிலும் அனைவருக்கும் மாற்றமான வெளிப்பாட்டை வெளிப்படுத்த முனைகின்றனர். அதாவது திறந்த கலாசாரத்தை ஆதரித்த படியாக நடத்தைகளை மாற்றுதல், இன்னும் ஆடையமைப்பில் கலாசாரத்திற்கு மாற்றமான நவீன முறைகளை உட்புகுத்துதல், அதிகமான புகைப்படப் பிரியர்களாக தற்கால மாணவர்கள் மாறி வருகின்றனர். தங்களது அன்றாட செயற்பாடுகள் யாவற்றையும் படம்பிடித்து உலகமே பார்க்கும் படியாக வட்ஸ்அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் என்பவற்றில் ஸ்டேடஸ்களாகவும், ஸ்டோரிகளாகவும் மாறிவிட்டு தனது வாழ்க்கை வழிமுறைகளை உலகறிய செய்கின்றனர். இன்னும் திரையுலகில் வரும் நடிகர்கள் போல அதிகமாக ஆண், பெண் கலப்புக்கள், சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெறுவதாக காணப்படுகிறது. ஆய்விற்காக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்ட மாணவர்கள் தற்காலத்தில் இவற்றை தவிர்க்க முடியாத ஒரு காரணியாகத்தான் பார்க்க முடிகிறது என்று கூறுகின்றனர்.

**6. இரவு வேளைகளில் அதிகமாக ஆன்லைனில் விழித்திருத்தல்.**

இன்று நிகழ்நிலை கல்விக்கு பழக்கப்பட்ட மாணவர்களில் அதிகமானோர் கற்றல் என்னும் சாட்டில் இரவு முழுவதும் ஆன்லைனில் கையடக்கத் தொலைபேசி மற்றும் தொழிநுட்ப ஊடகங்களின் ஊடாக சமூக வலைத்தளங்களிலே தான் தமது நேரத்தை முழுவதுமாக கழிக்கின்றனர். இரவு முழுதும் அதிகம் விழித்திருந்து பகல் பொழுதுகள் பூராகவும் உறங்கிக் கிடக்கின்ற நிலையை பரவலாக காணமுடிகிறது. இரவு வேளைகளில் தகவல் திரட்டல், கலந்துரையாடல், தகவல் பகிர்தல் என ஏதாவது ஒரு படிமுறையை சாட்டாக வைத்து அதிகமாக தேவையற்ற சீர்கேடுகளை நிகழ்த்தக்கூடியவர்களாக இன்று மாணவர்கள் இருக்கின்றனர். கட்டுப்பாடற்ற தன்மை, கோபம், கவனச் சிதறல், கற்றலில் ஆர்வமின்மை, எந்நேரமும் நித்திரைக் கலக்கம், பொடுபோக்குத்தனம், விரக்தியடைதல் போன்ற பண்புகள் உருவாக பிரதான காரணம் சீரான உறக்கம் இன்றி நவீன தொழில்நுட்பத்தில் ஆழ்ந்து கிடப்பதே ஆகும். தனது உடற் சுகாதாரத்திற்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை எவ்வித முக்கியத்துவமும் அற்ற விடயங்களுக்கு கொடுக்கின்றனர். இரவு நேரத்தில் நைட் டேடா இருக்கிறது எனும் சாட்டினை வைத்து தேவையற்ற பதிவுகள், வீடியோக்கள், திரைப்படங்கள், ஆபகாசங்கள், அனாச்சாரங்களை பார்க்ககூடியவர்களாகவும், கேட்கக் கூடியவர்களாகவும் இருப்பதோடு மட்டுமின்றி அதனை தாமாக செயற்படுத்தக்

கூடியவர்களாகவும், ஏனையோரை அந்த தவறை இழைக்க தூண்டக்கூடியவர்களாகவும் இன்று பல்கலைக்கழக மாணவர்கள் மாறிவருகின்றனர். இந்நிலையை தாமும் தன்னிடம் உணர்ந்த படியால் இக்கருத்தினை தாம் கூறுவதாக ஆய்விற்கு உட்படுத்திய மாணவர்கள் கூறுகின்றனர்.

**7. நவீன வாழ்க்கைப்போக்குகளுக்கு பழக்கப்படல்.**

கொவிட் 19 காலத்தில் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கை இணைய வழி கற்றல் என்பதால் மாணவர்கள் சமூக வளைத்தள சாதனங்களை அதிகமாக கையாளத் தொடங்கினர். எனவே ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களின் கருத்துப்படி தாங்கள் அதிகமாக நவீன வாழ்க்கை போக்குகளுக்கு பழக்கப்பட நவீன தொழில் நுட்ப சாதனங்கள் தூண்டுதலாக அமைகின்றன என அவர்கள் கூறுகின்றனர். அதுமாத்திரமின்றி யூடியுப், இன்ஸ்டகிராம் போன்ற வளைத்தளங்களில் அதிகமாக ஈடுபடுவதால் புதிய புதிய படங்கள் மற்றும் நாடகங்கள் மூலம் கவரப்படுகிறோம் என்றும், தம்முடைய நடை, உடை, பாவனைகளில் மாற்றம் ஏற்பட்டு தம்மை அறியாமலேயே தாங்கள் நவீன வாழ்க்கை போக்குகளுக்கு மாறுவதாகவும், அதனை கடைபிடிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் உண்ணும் உணவுகள், தலைமுடி நிறங்கள், ஆடை வடிவமைப்பு முறைகள், அணியும் ஆபரணங்கள், பேசும் விதம், கேலி, கூத்து, வீண் விளையாட்டுக்கள், பிறந்த நாள் கொண்டாட்டம் போன்ற விடயங்களில் அதிகமாக பெண்களும் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

**8. விரும்பத்தகாத குற்றச் செயல்களில் ஈடுபடுதலும் மற்றவர்களை ஈடுபடுத்தலும்.**

இக்கருத்தின் அடிப்படையில் சமூக வலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களிடம் கொவிட்-19க்கு பின்னர் அதிகமாக காணப்பட்டதால் அவர்களிடம் விரும்பத்தகாத ஒரு சில பழக்கவழக்கங்கள் காணப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். அதாவது சமூக வலைத்தள பாவனையால் கவரப்பட்டு காதல் வயப்படுவதாகவும், தங்களுடைய நண்பர்களை காதலிக்குமாறு வற்புறுத்தச் செய்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் பல்கலைக்கழகத்தில் தம்முடன் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளை கேலி செய்வதாகவும் மற்றும் பாதையோரங்களில் பெண் பிள்ளைகள் செல்லும் போது அவர்களை பின் தொடர்ந்து செல்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். இதற்கான காரணம் பற்றி அவர்களிடம் வினவப்பட்ட போது சமூக வளைத்தளங்களில் ஒளிபரப்பாகும் பாடல்கள் மற்றும் திரைப்படங்களில் காணப்வரைபுஒரு சில காட்சிகளினால் கவரப்பட்டு, தாமும் அது போல செய்ய வேண்டும் என்ற சிந்தனை அவர்களிடம் தோன்றுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

**முடிவுரை**

Covid-19 காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் நவீன தொழில் நுட்ப பாவனையால் அவர்களின் ஒழுக்கம் சார் அம்சங்களில் ஏற்பட்டுள்ள பாதக மாற்றங்களை கண்டறிதல் என்ற ஆய்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து பீட மாணவர்களிடம் தகவல்கள் பெறப்பட்டது.

கொவிட்-19 க்கு பின்னர் நவீன தொழில் நுட்ப சாதனங்களின் பாவனை கற்றல் நடவடிக்கைகளுக்கு அதிக நேரம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்டிருந்ததால் சாதக மாற்றங்களை விட பாதகமான மாற்றங்கள் அதிகமாக அடையப் பெற்றுள்ளதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. மேலும், 152 மாணவர்களின் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின்படி கொவிட்-19க்கு பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு 91.4 வீதமானவர்கள் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தியுள்ளனர். இதனால் அதிக மணி நேரங்களில் தொலைபேசியை கற்றல் நடவடிக்கைகளுக்கு, அதாவது 7 மணித்தியாலங்களை விடவும் அதிகமான மணி நேரங்களுடன் செலவழிப்பதால் அதிகமான பாதக மாற்றங்களை பல்கலைக்கழக மாணவர்களிடம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், தேவையற்ற காணொளி, வார்த்தை மற்றும் நடத்தையில் மாற்றம், அதிகமாக இரவு வேளையில் விழித்திருத்தல், நவீன வாழ்க்கைப் போக்கு, கலாச்சார, பண்பாட்டு மாற்றங்கள், கெட்ட நண்பர்கள் போன்ற இன்னோரன்ன பாதக மாற்றங்களையும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. நவீன தொழில் நுட்ப சாதனங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களுக்கு சவால் மிகுந்ததாக அடையாளாப்படுத்தப்பட்டாலும் பெரும்பாலான மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு உகந்தது என்றும் கற்றல் நடவடிக்கைகளுக்கு நவீன தொழில் நுட்ப சாதனம் தடையில்லை எனவும் கூறியிருப்பதை இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு நவீன தொழில் நுட்ப சாதனங்கள் முக்கிய காரணமாக காணப்படுவதோடு அவர்களின் ஒழுக்கம்சார் அம்சங்களிலும் பாதக மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பது தெளிவாகியது. நவீன தொழில் நுட்ப சாதனங்களை பாவிக்கும் வீதத்தை குறைப்பது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும். இவற்றின் பாவனையை கற்றலுக்கு தடையற்ற விதத்தில் நெறிப்படுத்த வேண்டும். இதில் பெற்றோர்களதும், ஆசிரியர்களதும் பங்கு மிக முக்கியமானதாகும்.

**பரிந்துரைகள்**

- நவீன தொழில்நுட்ப சாதனங்களினால் ஏற்வரைபுபாதிப்புக்கள் மற்றும் பாதகங்கள் தொடர்பில் விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தல்.
- நவீன தொழில்நுட்ப பாவனையால் எதிர்மறையான நடத்தைகளை கொண்டிருக்கும் மாணவர்களை புணர்வாழ்விற்கு உட்படுத்தல்.
- கற்றல் நடவடிக்கைகள் அல்லாத ஏனைய நேரங்களில் வெளிக்கள மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்.
- தத்தமது மத மற்றும் கலாசார விடயங்களில் அதிகமாக இவர்களை ஈடுபடுத்தல்.
- நவீனத்துவம், நவீன தொழில்நுட்பம் என்பவற்றில் மாணவர்கள் அதிகம் தரிக்கப்படாதிருக்க பெற்றோர்களும் பிள்ளைகளை அதிக கவனத்திலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருத்தல்.

**உசாத்துணைகள்**

Kanesarajah, K. (2016). நனோ தொழிநுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கவியல் பாதிப்புக்கள் - ஓர் ஆய்வு. *Arts Research Session, South Eastern University of Sri Lanka.*

Paslan, H. M., Aakila, M.N.F., Zunoomy, M.S., Shibly, F.H.A. (2019). சமூக வலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: கொவிட்-19 பரவலின் பின்னரான பகுப்பாய்வு. *8th International Symposium, Faculty of Islamic studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.*

Shameera, A.W.F., Nadhira, A.K.F. (2016). இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கம்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்ட ஆய்வு. *6th International Symposium, South Eastern University of Sri Lanka.*

Sumaiya, M.A., Safiya, A.H., Mahsoom, A.R.M. (2019). பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளுக்கு மத்தியில் வட்சப் பாவனையும் அதன் தாக்கங்களும்: இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு. *6th International Symposium, Faculty of Islamic studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.*

Thankavadivel, Brownsen. (2019). நவீன தொடர்பாடல் தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாடும் இளைஞர்களில் ஏற்படுத்தும் உளவியல் மற்றும் ஒழுக்கவியல் பாதிப்புக்களும். *8th International Arts Research Symposium, faculty of Arts and culture, South Eastern University of Sri Lanka.*

Yumna, A.S.F. (2020). சமூக வளைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும். *7th International Symposium, Faculty of Islamic studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.*

அஸ்வினி, வை. (n.d). *இளைய சமூகத்தினரின் தொடர்பாடல் முறையில் சமூக ஊடகங்களின் செல்வாக்கு.* arayampathy.lk. http://arayampathy.lk/argum/635%E0%AE%9A%E0%AE%AE%E0%AF%82%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A9

%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%A4%E0%AF%8A%E0%AE%9F%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%AA %E0%AE%BE%E0%AE%9F%E0%AE%B2%E0%AF%8D

நிஸாந்தி, உ. (2013, ஜூன் 08). *மாணவர்களின் கல்வி தடைபடுவதற்கான காரணங்கள்.* www.keetru.com. https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/24108